**மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல்**

**&**

**ரோட்டரி கிளப் ஆஃப் இராசிபுரம்**

**இணைந்து வழங்கும்**

**மொபைல் கல்வி செயலிகள் உருவாக்கிய ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா**

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாண்டிச்சேரி, ஆல் இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் நிறுவனம், இராசிபுரம் ரோட்டரி சங்கம் மற்றும் இராசிபுரம் இன்னர்வீல் சங்கம் இணைந்து மொபைல் கல்வி செயலிகளை 10.54 நிமிடத்தில் உருவாக்கி உலக சாதனை செய்த 27 ஆசிரியர்களுக்கு "உலக சாதனை – 2025" சான்றிதழ் வழங்கும் விழா 28.6.2025 அன்று இராசிபுரம் ரோட்டரி ஹாலில் நடந்தது.

விழாவிற்கு விரிவுரையாளர் ஏ. சிவபெருமான் வரவேற்புரை வழங்கினார். இராசிபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் எம். முருகானந்தன் மற்றும் இராசிபுரம் இன்னர்வீல் சங்கத் தலைவர் சி. சுதா மனோகரன் முன்னிலை வகித்தார்.

நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மு. செல்வம் தலைமையுரையில் இந்தியாவின் மக்கள் தொகையானது , உலக மக்கள் தொகையில் 17.78% என்றும் கின்னஸ் உலக சாதனை அறிக்கை 2024 இன் படி உலகம் முழுவதும் 2,638 உலக சாதனைகள் பட்டியலில் இந்தியர்கள் 60 பேர் மட்டும் இடம் பிடித்துள்ளனர் என்றும், இவ்வெண்ணிக்கையின் சதவீதம் 2.27% மட்டுமே என்றும் கூறினார். மேலும் சாதனைகள் செய்ய அதிக நேரம், நிறைந்த பயிற்சி, சீரிய ஈடுபாடு போன்றவைகள் தேவைப்படுகிறது என்றும் மொபைல் கல்வி செயலிகளை அதிக நேரம் செலவிட்டு, தொடர்ப்பயிற்சியில் ஆசிரியர்கள் ஈடுபட்டதன் விளைவாகவே இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்றும் இது ஒரு கலாச்சாரமாக மாறினால் சாதனை ஆசிரியர்கள் சாதனைப் படைக்கும் மாணவர்களை உருவாக்குவார்கள் என்றும் கூறினார்.

விழாவில் நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வலைதளத்திற்கானப் புதிய செயலியை கொல்லிமலை, நத்துக்குழிப்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் வடிவமைத்து உருவாக்கி வெளியிட்டார்

மொபைல் கல்வி செயலிகளை உருவாக்கிய 27 ஆசிரியர்களுக்கு “உலக சாதனை – 2025” கான சான்றிதழ் வழங்கப்பட்டது. பாண்டிச்சேரி, ஆல் இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் நிறுவன தலைவர் வெங்கடேசன் சிறப்புரை ஆற்றினார். ரோட்டரி மகிழ்ச்சிப் பள்ளிகள் தலைவர் க.செ. கருணாகர பன்னீர்செல்வம், மொபைல் கல்விச் செயலி வல்லுநர் ப. அருளானந்தம், இராசிபுரம் இன்னர்வீல் சங்க செயலர் சிவலீலாஜோதி போன்றோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இராசிபுரம் ரோட்டரி சங்க செயலர் இராமசாமி நன்றியுரை வழங்கினார்.